**செய்தி வெளியீடு எண்.457** **நாள் :– 22.11.2006**

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சிக்கு ரூ. 7.32 கோடி ஒதுக்கீடு 25 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்</u>

மகப்பேறு காலத்தில் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் வருமான இழப்பினை ஈடு செய்யவும், கருவுற்ற காலத்தில் ஊட்டச் சத்துள்ள உணவை உட்கொண்டு எடை குறைவில்லாத குழந்தைகளை ஈன்றெடுக்கவும், இரத்த சோகை ஏற்படுவதைத் தடுக்கவும் உதவக்கூடிய வகையில் தமிழக அரசின் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதங்களுக்கும், பின்னர் 3 மாதங்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 6000 ரூபாய் வழங்கப்படுகிறது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாளாகிய 15.9.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 21 ஆயிரத்து 985 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதிக்குள் 2 இலட்சத்து 11 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இத்திட்டத்திற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கு மட்டும் இத்திட்டத்தின்கீழ் 12,206 ஏழை கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில் 7 கோடியே 32 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் இருந்து, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (22.11.2006) தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகரைச் சேர்ந்த 25 கர்ப்பிணிப் பெண்களுக்கு 1000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கினார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், சென்னை மாநகர மேயர் திரு. மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9